Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM
DATE: 27.05.2026

Case No : CrlMP.569/2026
Deposition of Witness : Witness No.1

| | |
|---|---|
| Name : திரு.அந்தோணி ஜேசுராஜன் | Father/Husband Name : மரிய ஜோசப் |
| Age : 49 | Village : சொக்கன்குடியிருப்பு |
| Taluk : சாத்தான்குளம் | Calling: |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 27.05.2026

**<u>சத்திய பிரமாண வாக்குமூலம்</u>:-**

1. என்னுடைய சொந்த ஊர் சொக்கன்குடியிருப்பு ஆகும். நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். கடந்த 04.10.2021 அன்று எங்கள் சொந்த ஊரில் உள்ள சர்வே எண்.64 க்கு உட்பட்ட ஒரு ஏக்கர் நிலத்தில் ஆக்கிரமிப்பு போக மீதமுள்ள சுமார் 38 சென்ட் கல்லறை நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து அந்த இடத்தில் உள்ள 7 பொதுப்பாதைகளையும் அடைக்கும் எண்ணத்தில் பொதுவழியின் மத்தியில் போக்குவரத்துக்கு இடையூறாகவும், பொதுமக்களுக்கு இடைஞ்சலாகவும் பெரிய கற்களை 7 லாரிகளில் கொட்டினார்கள். இதுசம்பந்தமாக காவல்துறைக்கு 05.10.2021 அன்று புகார் அளிக்கப்பட்டது. நான் தற்போது சென்னையில் வசித்து வருவதால் 03.11.2021 அன்று அதுபற்றி தெரியவர காவல்துறை கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாவட்டத்திற்கு புகார் அளித்தேன். மேலும் அன்றைய தினமே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 133 ன் கீழ் ஆக்கிரமிப்பு இடத்தை அகற்றச் சொல்லி மனு அளித்தேன். 08.11.2021 அன்று என்னுடைய மனுவை பெற்றுக்கொண்டு, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எங்கள் ஊரில் நடந்த திருவிழாவிற்காக வந்தபொழுது 13.11.2021 அன்று ஊர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் மேற்படி கற்களை அகற்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொதுமக்கள் அனைவரும் பொதுப்பாதையில் இடைஞ்சலாக உள்ள கற்களை அகற்றி போக்குவரத்துக்கு வழி செய்தார்கள். அந்த சமயம் தட்டார்மடம் காவல் ஆய்வாளர் மற்றும் அவருடைய குழுக்கள் மேற்படி இடத்திற்கு உடனே வந்து அனைவரையும் அப்புறப்படுத்தினார்கள். சிலரை மிரட்டினார்கள். இதுசம்பந்தமாக அன்றைய தினமே நான் மேற்படி காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி ஆன்லைன் மூலமாக புகார் அளித்தேன். மேற்படி இரண்டு புகார்களையும் குறித்து தகவல் அறியும் சட்டத்தில் கேட்டபோது நான் கொடுத்த புகாரும், ஊர் சார்பாக கொடுத்த புகாரிலும் எதிரிகள் கொடுத்த புகாரிலும் குற்ற வழக்கு எண்.198/2021 தட்டார்மடம் காவல்நிலையத்தில் பதிவு செய்து பிரிவு 145, குற்றவியல் நடைமுறைச் சட்டம் கீழ் திருச்செந்தூர் கோட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. கனம் கோட்டாட்சியர் அவர்கள் மேற்படி கற்களை அகற்றக்கோரி உத்தரவு

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.05.27 18:49:40 +0530

பிறப்பித்தார்கள். மேற்படி உத்தரவை எதிர்த்து எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வில் வழக்கு தாக்கல் செய்து அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு சிவில் பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எதிரிகள் பொய்யாக கடந்த 2022 ஆம் வருடம் Crl.M.P.2465 of 2022 வழக்கு பதிவு செய்து அந்த வழக்கில் தட்டார்மடம் காவல் ஆய்வாளர் கொடுத்த அறிக்கையின் பேரில் பொய் வழக்கு என முடிவு செய்யப்பட்டது. மேற்படி எதிரிகள் மீண்டும் கடந்த 2023 ஆம் வருடம் Crl.M.P.7793 of 2023 என்ற தனிநபர் வழக்கு தாக்கல் செய்து பொய்யான சங்கதிகள், குற்றச்சாட்டுகள் நீதிமன்ற தீர்ப்புரை அசல் வழக்கு எண்.26 of 1991, மாண்புமிகு தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் எதிரிகள் வழக்கு தாக்கல் செய்து சாதகமாக தீர்ப்புரை பெற்றதாகவும் அதன் அடிப்படையில் அவருக்கு சொந்தமான நிலத்தில் அன்னதான மண்டபம் கட்டுவதற்காக போட்டிருந்த கற்களை சேதப்படுத்தியதாகவும் அங்கு அந்த சமயத்தில் அவர்கள் வந்ததாகவும் அப்போது நானும் மற்றவர்களும் மிரட்டியதாகவும், அசிங்கமாக பேசியதாகவும் பொய் சாட்சியம் அளித்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு தற்போது கனம் இந்நீதிமன்றத்தில் CC 187/2025 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி எதிரிகள் மீது பொது அலுவலகத்தில் தவறான சங்கதிகள் சொல்லி பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்து, பொய் சாட்சியம் அளித்து எனக்கு மனக்காயத்தையும், நஷ்டத்தையும் ஏற்படுத்தினார்கள். எனவே மேற்படி எதிரிகளுக்கு அறிவிப்பு அளித்து அவர்கள் மீது BNS பிரிவுகள் 216, 217, 229 ன் கீழ் தண்டனை வழங்கி இழப்பீடு அளிக்க வேண்டுகிறேன்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.05.27 18:49:48 +0530

Judicial Magistrate, Sathankulam.